சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ம் நாள் வியாழக்கிழமை

**இ.நி.ம.எண்.03/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.138/2018**

ஜெயா

.... மனுதாரர் / வாதி

**// எதிராக //**

1. குமார்

2. துரை

3. கோவிந்தம்மாள் (இறப்பு)

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 28.10.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.செந்தில்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(1)-ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:10 +0530

## 2. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்த மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்: -

(i) தான் மேற்படி மனுவில் மனுதாரர்/தாவாவில் வாதி ஆவேன் என்றும், மேற்படி தாவா தாக்கல் செய்த போது கீழ்கண்ட ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், கனம் கோர்ட்டில் தனது தரப்பு கூடுதல் ஆவணமாக இன்று கனம் கோர்ட்டில் ஒப்படைக்கிறேன் என்றும், மேற்படி ஆவணமானது தாவா கிராமத்தில் வசிக்கும் பிரதிவாதிகளின் வீட்டின் அருகில் வசிக்கும் பொதுவரான கோபால் த/பெ குப்புசாமி என்பவரை பிரதிவாதிகள் அணுகி தனது தரப்பில் வந்த நபர்கள் பேசி வகையில் சண்டை சச்சரவு ஏற்படும் என்பதால் பொதுவரான கோபால் பெயரில் எழுதி கொடுக்கிறோம் என செலுத்த வேண்டிய பணத்திற்கு கால அவகாசம் கூறி எழுதி ஒப்பந்த ஆவணம் கோபாலிடம் கொடுத்தனர் என்றும், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும்,

(ii) கடந்த 03.09.2015-ம் தேதியில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் தனது தரப்பில் மற்றும் பிரதிவாதிகள் ஒரு பேச்சுவார்த்தை செய்து அதில் பிரதிவாதிகள் தனக்கு இன்றைய தேதியிலிருந்து 7 மாத வாய்தாவிற்குள் தனக்கு சேர வேண்டிய பணத்தை நாங்கள் திருப்பி கொடுத்துவிடுகிறோம் என்று எல்லப்புடையாம்பட்டி கிராமத்தை சேர்ந்த குப்புசாமி மகன் கோபால் என்பவருக்கு இந்த ஒப்பந்தத்தை பிரதிவாதிகள் எழுதி கொடுத்தார்கள் என்றும், அந்த ஆவணம் தற்போதுதான் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த ஆவணத்தை வாதி சார்பாக 3-ம் சாட்சியான கோபால் த/பெ குப்புசாமி அழைத்து நீதிமன்றத்தில் இந்த ஒப்பந்தத்தை குறியீடு செய்தால்தான் கனம் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரிய வரும் என்றும், எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு கூர்ந்து இன்று தான் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட கூடுதல் ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:14 +0530

வேண்டும் என்று மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. **2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்: -**

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியது. இந்த எதிர்மனுதாரர் தான் இங்கு யுக்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) மனு அபிடவிட் பாரா 2-ல் கண்ட சங்கதிகள் சரியல்ல. மனுதாரர் ஒப்படைக்கும் கூடுதல் ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கு சிறிதும், சம்பந்தம் இல்லை. 03.09.2015 தேதியில் ஒரு ஒப்பந்த பத்திரத்தை, தாவா கிராமத்தில் இவ்வெதிர்மனுதாரின் வீட்டின் அருகில் வசிக்கும் பொதுவரான கோபால் என்பவரை, இந்த பிரதிவாதி அனுகி மனுதாரர் தரப்பில் வந்த நபர்கள் பேசிய வகையில் சண்டை சச்சரவு ஏற்படும் என்பதால், பொதுவரான கோபால் பெயரில் எழுதி கொடுக்கிறோம் என செலுத்த வேண்டிய பணத்திற்கு கால அவகாசம் கூறி ஒரு ஒப்பந்த ஆவணம் கோபாலிடம் கொடுத்தனர் என்பது அப்பட்டமான பொய் சங்கதியாகும். அவ்வாறு ஒரு ஒப்பந்த பத்திரத்தை இந்த எதிர்மனுதாரர் மேற்படி கோபால் என்பவரிடம் எப்பொழுதும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் மேற்படி ஆவணம் பொய்யானது, மோசடியானது என்றும் இந்த வழக்கிற்காக திட்டமிட்டு சதி செய்து மனுதாரரால் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணம் என்றும் தெரிவிக்கின்றார்.

(iii) மனு அபிடவிட் பாரா 3-ல் கண்ட சங்கதிகள் சரியல்ல. 03.09.2015-ம் தேதியில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மனுதாரர் தரப்பில் மற்றும் இந்த எதிர்மனுதாரர் ஒரு பேச்சுவார்த்தை செய்து அதில் இவ்வெதிர்மனுதாரர் மனுதாரருக்கு இன்றைய தேதியிலிருந்து 7 மாத வாய்தாவிற்குள் மனுதாரருக்கு சேர வேண்டிய பணத்தை திருப்பி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:17 +0530

கொடுத்துவிடுகிறோம் என்று எல்லப்புடையாம்பட்டி கிராமத்தை சோந்த கோபால் என்பவருக்கு ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார்கள் என்பது முற்றிலும் தவறாகும். அந்த ஆவணம் தற்போதுதான் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி ஒப்பந்த ஆவணத்தை வாதி சார்பாக 3-ம் சாட்சியான கோபால் என்பரை அழைத்து நீதிமன்றத்தில் குறியீடு செய்தால்தான் உண்மை நிலை தெரிய வரும் என்பதும் வாதியால் வழக்கிற்க்காக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணமாகும்.

(iv) மனுதாரர் சார்ந்திருக்கும் 03.09.2015 தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் பொய்யானது, மோசடியானது என்பதால்தான் மேற்படி ஆவணத்தை குறித்து மனுதாரர் தாவா பிராதிலோ, அவரது முதன்மை நிருபன வாக்கு மூலத்திலோ எதுவும் தெரிவிக்காமல் தாவாவில் தற்பொழுது வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்பதால் மேற்படி வீதம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தை ஒப்படைக்க மனு தாக்கல் செய்துள்ளார்.

(v) தாவா பிராதில் கூறாத சங்கதிகள் குறித்து புதியதாக ஒரு ஆவணத்தை சமாப்பிக்கவும் அது குறித்து சாட்சியம் அளிக்கவும் மனுதாரர் முற்படுவது தவறாகும். இவ்வெதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்திருக்கும் 03.09.2015 தேதியிட்ட ஆவணம் உண்மையானதெனில் அதில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி தேதியிலிருந்து 7 மாத காலத்திற்குள் தொகையை செலுத்தி பத்திரத்தை திருப்பி கொடுக்கிறோம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பின் 7 மாதம் கழித்தாவது அந்த ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரர் நடவடிக்கை எடுக்காமலும் சுமார் 2 வருடம் 9 மாதம் கழித்து தாவா தாக்கல் செய்யும் பொழுதும் மனுதாரர் தெரிவிக்காததிலிருந்தே மேற்படி வீதம் மனுதாரர் மோசடியாக ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்பதை அறிய முடியும்.

(vi) தாவாவில் மனுதாரருக்கு வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்ற காரணத்தினால் வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை இழுத்தடிக்க வேண்டுமென்ற



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:23 +0530

தீய எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்கப்பட்டாள் இவ்வெதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இவ்வெதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**தீர்வு** : -

**5.** மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(1)-ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**6.** மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மேற்படி தாவா தாக்கல் செய்த போது கீழ்கண்ட ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், கனம் கோர்ட்டில் தனது தரப்பு கூடுதல் ஆவணமாக இன்று கனம் கோர்ட்டில் ஒப்படைக்கிறேன் என்றும், மேற்படி ஆவணமானது தாவா கிராமத்தில் வசிக்கும் பிரதிவாதிகளின் வீட்டின் அருகில் வசிக்கும் பொதுவரான கோபால் த/பெ குப்புசாமி என்பவரை பிரதிவாதிகள் அணுகி தனது தரப்பில் வந்த நபர்கள் பேசி வகையில் சண்டை சச்சரவு ஏற்படும் என்பதால் பொதுவரான கோபால் பெயரில் எழுதி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:26 +0530

கொடுக்கிறோம் என செலுத்த வேண்டிய பணத்திற்கு கால அவகாசம் கூறி எழுதி ஒப்பந்த ஆவணம் கோபாலிடம் கொடுத்தனர் என்றும், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், கடந்த 03.09.2015-ம் தேதியில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் தனது தரப்பில் மற்றும் பிரதிவாதிகள் ஒரு பேச்சுவார்த்தை செய்து அதில் பிரதிவாதிகள் தனக்கு இன்றைய தேதியிலிருந்து 7 மாத வாய்தாவிற்குள் தனக்கு சேர வேண்டிய பணத்தை நாங்கள் திருப்பி கொடுத்துவிடுகிறோம் என்று எல்லப்புடையாம்பட்டி கிராமத்தை சேர்ந்த குப்புசாமி மகன் கோபால் என்பவருக்கு இந்த ஒப்பந்தத்தை பிரதிவாதிகள் எழுதி கொடுத்தார்கள் என்றும், அந்த ஆவணம் தற்போதுதான் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த ஆவணத்தை வாதி சார்பாக 3-ம் சாட்சியான கோபால் த/பெ குப்புசாமி அழைத்து நீதிமன்றத்தில் இந்த ஒப்பந்தத்தை குறியீடு செய்தால்தான் கனம் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரிய வரும் என்றும், எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு கூர்ந்து இன்று தான் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட கூடுதல் ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**7.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், மனு அபிடவிட் பாரா 2-ல் கண்ட சங்கதிகள் சரியல்ல என்றும், மனுதாரர் ஒப்படைக்கும் கூடுதல் ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கு சிறிதும், சம்பந்தம் இல்லை என்றும், 03.09.2015 தேதியில் ஒரு ஒப்பந்த பத்திரத்தை, தாவா கிராமத்தில் இவ்வெதிர்மனுதாரின் வீட்டின் அருகில் வசிக்கும் பொதுவரான கோபால் என்பவரை, இந்த பிரதிவாதி அணுகி மனுதாரர் தரப்பில் வந்த நபர்கள் பேசிய வகையில் சண்டை சச்சரவு ஏற்படும் என்பதால், பொதுவரான கோபால் பெயரில் எழுதி கொடுக்கிறோம் என செலுத்த வேண்டிய பணத்திற்கு கால



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.11.06 17:04:29 +0530

அவகாசம் கூறி ஒரு ஒப்பந்த ஆவணம் கோபாலிடம் கொடுத்தனர் என்பது அப்பட்டமான பொய் சங்கதியாகும் என்றும், அவ்வாறு ஒரு ஒப்பந்த பத்திரத்தை இந்த எதிர்மனுதாரர் மேற்படி கோபால் என்பவரிடம் எப்பொழுதும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் மேற்படி ஆவணம் பொய்யானது, மோசடியானது என்றும் இந்த வழக்கிற்காக திட்டமிட்டு சதி செய்து மனுதாரரால் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணம் என்றும் தெரிவிக்கின்றார் என்றும், மனு அபிடவிட் பாரா 3-ல் கண்ட சங்கதிகள் சரியல்ல என்றும், 03.09.2015-ம் தேதியில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மனுதாரர் தரப்பில் மற்றும் இந்த எதிர்மனுதாரர் ஒரு பேச்சுவார்த்தை செய்து அதில் இவ்வெதிர்மனுதாரர் மனுதாரருக்கு இன்றைய தேதியிலிருந்து 7 மாத வாய்தாவிற்குள் மனுதாரருக்கு சேர வேண்டிய பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறோம் என்று எல்லப்புடையாம்பட்டி கிராமத்தை சோந்த கோபால் என்பவருக்கு ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தார்கள் என்பது முற்றிலும் தவறாகும் என்றும், அந்த ஆவணம் தற்போதுதான் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி ஒப்பந்த ஆவணத்தை வாதி சார்பாக 3-ம் சாட்சியான கோபால் என்பரை அழைத்து நீதிமன்றத்தில் குறியீடு செய்தால்தான் உண்மை நிலை தெரிய வரும் என்பதும் வாதியால் வழக்கிற்க்காக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணமாகும் என்றும்,

**8.** மனுதாரர் சார்ந்திருக்கும் 03.09.2015 தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் பொய்யானது, மோசடியானது என்பதால்தான் மேற்படி ஆவணத்தை குறித்து மனுதாரர் தாவா பிராதிலோ, அவரது முதன்மை நிருபன வாக்கு மூலத்திலோ எதுவும் தெரிவிக்காமல் தாவாவில் தற்பொழுது வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்பதால் மேற்படி வீதம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தை ஒப்படைக்க மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா பிராதில் கூறாத சங்கதிகள் குறித்து புதியதாக ஒரு ஆவணத்தை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:33 +0530

சமாப்பிக்கவும் அது குறித்து சாட்சியம் அளிக்கவும் மனுதாரர் முற்படுவது தவறாகும் என்றும், இவ்வெதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்திருக்கும் 03.09.2015 தேதியிட்ட ஆவணம் உண்மையானதெனில் அதில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி தேதியிலிருந்து 7 மாத காலத்திற்குள் தொகையை செலுத்தி பத்திரத்தை திருப்பி கொடுக்கிறோம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பின் 7 மாதம் கழித்தாவது அந்த ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரர் நடவடிக்கை எடுக்காமலும் சுமார் 2 வருடம் 9 மாதம் கழித்து தாவா தாக்கல் செய்யும் பொழுதும் மனுதாரர் தெரிவிக்காததிலிருந்தே மேற்படி வீதம் மனுதாரர் மோசடியாக ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்பதை அறிய முடியும் என்றும், தாவாவில் மனுதாரருக்கு வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்ற காரணத்தினால் வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டாள் இவ்வெதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இவ்வெதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபித்துள்ளார்.

**9.** அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரியும், அவ்வாறு பரிகாரம் வழங்கவில்லை எனில் மாற்றுப்பரிகாரமாக மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்திய அட்வான்ஸ் தொகையை திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணையும் 2022, 2023 ம் ஆண்டிலேயே செய்யப்பட்டுள்ளார். தற்போது மனுதாரர்/வாதி ஒரு ஒப்பந்தப்பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து அதில் பொதுவரான கோபால் த/பெ. குப்புசாமி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:36 +0530

என்பவருக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஜெயா என்பவருடன் ஏற்பட்ட ஒப்பந்தப் பத்திரத்திற்காக 7 மாதத்திற்குள் ரூ.9,00,000/-ம் செலுத்துவதாகவும், அவ்வாறு செலுத்தவில்லை எனில் வட்டித்தொகையும் தருவதாகவும் ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும், அந்த ஒப்பந்தப்பத்திரம் கோபால் என்பவரிடம் வைத்துக்கொள்ள முழு மனதுடன் சம்மதிக்கப்படுகிறது என அதில் எழுதப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்பத்திரத்தை பற்றி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது போல தாவா வழக்குரையில் ஏதும் சொல்லவில்லை. தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த ஆவணம் ஏற்கனவே இருந்திருப்பின் அதை வழக்குரையில் மனுதாரர்/வாதி கூறியிருக்கலாம். அவ்வாறு சொல்லாமல் தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டிருப்பது ஏற்புடையதாக இல்லை. மேலும் இந்த வழக்கு 2018 ம் ஆண்டில் இருந்து நிலுவையில் இருந்து வருகிறது. வாதுரைகளில் ஏதும் சொல்லாமல் தற்பொழுது இந்த மனு தாக்கல் செய்திருப்பது புதுமையான ஒரு சங்கதியை மனுதாரர்/வாதி தரப்பில் கூறி காலம் கடத்துவதற்காக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:04:40 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : -

--- இல்லை ---

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.11.06 17:04:44 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.